செ.வெ.எண்.971 நாள்.01.11.2010

## பத்திரிகைச் செய்தி

**மாற்றுத் திறனாளிகள் நல ஆணையகம், ஆயிரம் விளக்கு, சென்னை–600 006.**

## அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம், 2010

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் **3**ஆம் நாள் அன்று **"அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம்"** கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டும் தமிழகத்தில் அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம் வருகிற **3–12–2010** அன்று அனுசரிக்கப்பட உள்ளது. இதனையொட்டி மாற்றுத் திறன் படைத்த மாணவ / மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி உபகரணங்களும், மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த முறையில் சேவை புரிந்தோருக்கு மாநில விருதுகளும் வழங்கப்படும்.

- மிகச் சிறப்பாக பணியாற்றி / சுயதொழில் புரிந்து வரும் கை, கால் பாதிக்கப்பட்ட, பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட, செவித்திறன் பாதிக்கப்பட்ட, மனவளர்ச்சி குன்றிய மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்த மாற்றுத் திறனாளிகளுக்கும்,
- மிகச் சிறந்த முறையில் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்புக் கல்வி / பயிற்சி அளிக்கும் சிறப்பு ஆசிரியர்களுக்கும்,
- மாற்றுத் திறனாளிகளுக்கு மிகச் சிறப்பாக மறுவாழ்வு உதவிகளை அளித்து வரும் தொண்டு நிறுவனங்களுக்கும்,
- மாற்றுத் திறனாளிகளுக்கு தன்னலமற்ற சேவை புரிந்துவரும் சமூகப் பணியாளர்களுக்கும்,
- மாற்றுத் திறனாளிகளுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு வழங்கி வரும் தொழில் நிறுவனத்திற்கும்,
- அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் மாற்றுத் திறன் படைத்த மாணவ / மாணவிகளுக்கு சிறப்பான முறையில் கல்வி அளித்து வரும் தொண்டு நிறுவனங்களுக்கும்

மாநில விருதுகள் வழங்கப்படவுள்ளதால் அவ்விருதுகளுக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தக்க படிவத்தில் **10–11–2010**க்குள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்கள் தங்கள் பகுதியைச் சார்ந்த மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுகத்திலிருந்தோ அல்லது மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம், **15/1**, மாதிரி பள்ளிச் சாலை, ஆயிரம்விளக்கு, சென்னை–**600 006** என்ற அலுவலகத்திலிருந்தோ நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9